சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

**MCOP. 09/2021**

**28.01.2026**

ம.சா.1 திரு.செந்தில்குமார், த/பெ. தெட்சிணாமூர்த்தி

**3 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து நடந்த காரில் நாங்கள் 9 நபர்கள் சென்றோம். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.3 ஆவணத்தில் Passenger Carrying 4 Wheeler Carrying Capacity Upto 6 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.2 விபத்து பதிவேட்டில் எனக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கொரோனா காலம் என்பதால் மருத்துவமனையிலிருந்து என்னை வெளியே அனுப்பிவிட்டார்கள். கொரோனா காலத்தில் வெளியில் யாரும் செல்லக்கூடாது என தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். அரசால் விதிக்கப்பட்டிருந்த தடையை மீறியும் நான் பயணம் செய்த காரில் அனுமதிக்கப்பட்ட நபர்களை விட அதிகம் பயணம் செய்ததாலும் மனுவில் கோரியுள்ளவாறு நஷ்ட ஈடு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என்னுடன் காரில் பயணம் செய்த நபர்களில் 6 நபர்கள் நஷ்ட ஈடு கேட்டு வழக்கு தாக்கல் செய்து நஷ்ட ஈடு பெற்றுள்ளார்கள் என்றால் எத்தனை நபர்கள் வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. வாகனத்தில் அளவிற்கு அதிகமாக நபர்கள் சென்றதால் காரின் உரிமையாளர்தான் நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. நான் பயணம் செய்த காரின் காப்பீடு விதிகளுக்கு எதிராக உரிமையாளர் செயல்பட்டுள்ளதால் அவர்தான் நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. என் காயத்தின் தன்மை குறித்து சான்று எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு விபத்தில் காயம் எதுவும் ஏற்படவில்லை என்றாலும் நான் மருத்துவமனைக்கு சென்றதற்கு முறையான ஆவணம் இல்லை என்றாலும் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனவே 3 ஆம் எதிர்மனுதாரருக்கு எதிராக மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.